Pullambadi canal scheme

*44 Q.—**Sri S. LAZAR :** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா:

(அ) புள்ளம்பாடிக் கால்வாய் திட்டத்திற்காக அடையப் பட்ட அல்லது அடைய உத்தேசிக்கப்படுகிற நிலங்களின் பரப்பு என்ன ?

(ஆ) நில ஆர்ஜித நடவடிக்கைகள் தொடங்குவதற்கு முன்னரே மக்கள் தாமாகவே முன்வந்து எவையேனும் நிலங்களைக் கொடுத்தனரா ?

(இ) நிலம் கொடுக்கப்பட்ட பின்னரும் அந்தப் பசலி ஆண்டு களுக்காக அந்த ரயத்துக்களிடமிருந்து கிஸ்தி வசூலிக்கப் பட்டதா ?

(ஈ) அப்படி வசூலிக்கப்பட்ட கிஸ்தியை திருப்பிக் கொடுத்துவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) 3,500 acres approximately are proposed to be acquired of which 210 acres have already been acquired.

(*b*) The owners of certain lands gave their consent to the Public Works Department to enter upon their lands, but none gave any land free of cost.

(*c*) Kist in respect of lands taken possession of by Public Works Department which were left waste by the owners was not collected for fasli 1368. But kist was, however, collected in respect of lands which, though taken over by Public Works Department, remained under the effective possession and enjoyment of the owners.

(*d*) Does not arise in view of the answer to clause (*c*).

SRI S. LAZAR : கிஸ்தி வசூல் செய்யப்படாமல் நிலத்தை எடுத்துக்கொண்ட பிறகு ஏற்கனவே விவசாயம் செய்தார்கள் என்பதற்காக இன்றும் கிஸ்தி வசூல் செய்யப்பட்டு வருகிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக் கிறதா ? அப்படியானல் இதுவரையில் வசூல் செய்யப்பட்ட கிஸ்திகளை மராமத்து இலாகா மூலமாக திருப்பிக்கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : விவசாயிகளுக்கு நிலங்கள் கொடுத்து அவர்களும் உழுது பயிரிட்டு லாபம் அடைந்து வருகிற போது கிஸ்தி கொடுக்கவேண்டும். அவர்களே நிலத்தை அநுப வித்துக்கொண்டு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்றால் அது நல்லது அல்ல என்று கனம் அங்கத்தினருக்கு யோசனை சொல்ல விரும்புகிறேன்.

14th December 1959]

SRI S. LAZAR : என் கேள்வி என்னவென்றால் அவர்கள் உழுது சாகுபடி செய்யாத நிலங்களுக்குக்கூட கிஸ்தி வசூல் செய்யப்பட்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால் அதைத் திருப்பிக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : அதுபற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

SRI V. SUBBIAH : இரண்டு வருஷ காலமாகியும் கூட நஷ்டஈடு கொடுக்கப்படாமல் இருப்பதை விரைவில் கொடுக்க தகுந்த ஏற்பாடு செய்யமுடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : விரைவில் கொடுக்க தகுந்த ஏற்பாடு செய்யப்படும்.

Pullambadi and New Kattalai High Level Schemes

* 45 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the date when (i) the Pullambadi Canal Scheme, and (ii) the New Kattalai High Level Scheme were originally scheduled to be completed ;

(*b*) the date when both the schemes are now expected to be completed ;

(*c*) the difference, if any, between the estimated and actual cost of both the schemes ;

(*d*) when water will be let into the two canals for irrigation ; and

(*e*) the acreage expected to be irrigated with the water from the two canals during the coming fasli year?

THE HON. SRI P. KAKKAN : (*a*) 1961–62.

(*b*) Before June 1960.

(*c*) The difference will be known only after the completion of the schemes and the accounts connected therewith.

(*d*) water was let down in the canals for irrigation on 17th September 1959.

(*e*) About 4,000 acres under New Kattalai High Level Channel and 5,000 acres under the Pullambadi canal.

SRI S. LAZAR : இந்தத் திட்டத்தின் மிகுதியுள்ள பாகமும் எப்போது அமுலுக்குக் கொண்டுவரப்படும் ? அங்கும் எப்போது தண்ணீர் விடப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : துரிதமாக அங்கே வேலை முடிந்த பிற்பாடு தண்ணீர் விடுவதற்கும் ஏற்பாடு செய்யப்படும்.